# திருச்சபையியலும் முதல் வத்திக்கான் சங்கமும்

சங். திரேஷியன் பாபு, FSSPX.

**1864, டிசம்பர் 6-ம் நாள்:**

பாப்பரசர் ஒன்பதாம் பத்திநாதர் கூட்டின விசேஷ திருவழிபாட்டு பேராயத்தின் கூட்டத்தில் அனைத்து கர்தினால்களும், சில திருச்சபை அதிகாரிகளும் கலந்து கொண்டனர். கூட்டத்தின் இறுதியில் திருச்சபை அதிகாரிகள் வெளியேற, பாப்பரசரும் மற்ற கர்தினால்கள் மட்டும் ஒரு விசேஷ கருத்தை குறித்து ஆலோசிப்பதற்காக அங்கே இருந்தனர். இச்செயல் மிகவும் பரபரப்பை ஏற்படுத்தியது. (திருச்சபை இருந்த நெருக்கடியான நிலையில்) ஏன் இக்கூட்டம், என்ன பேசப்பட்டது. அதன் விளைவு என்னவென்று கத்தோலிக்க நாளிதழ்களில் பரபரப்பாக பேசப்பட்டது. கடைசியாக, பொதுச்சங்கம் ஒன்றைக் கூட்டப்போவதாக ஒரு வதந்தி பரவியது. அர்ச்.இராயப்பர் மறைவின் 18-ம் நூற்றாண்டு விழா 1867, ஜுன் 29-ம் நாள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அத்திருப்பலியில் கலந்துகொள்வதற்காக சுமார் 500 ஆயர்கள் உரோமை நகருக்கு வந்திருந்தனர். அத்தருணத்தைப் பயன்படுத்தி, பாப்பரசர் அத்திருப்பலியின் பிரசங்கத்தில் முதன்முறையாக பொதுச்சங்கம் ஒன்றினைக் கூட்டப்போவதாக அறிவித்தார். பின்னர் அச்சங்கத்திற்கு தேவையான அனைத்து காரியங்களும் முழுவீச்சில் இறங்கின. பல துறைகளிலிருந்து அறிஞர்கள் பலர் வரவழைக்கப்பட்டு சங்கத்தில் விவாதிக்கப்பட வேண்டிய தலைப்பை குறித்து ஆலோசனை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர். இவர்களது முயற்சியால் ஐந்து ஏடுகள் தயாரிக்கப்பட்டன.

1. அக்காலத்தில் நிலவிய தப்பறைகளுக்கு பதிலளிக்கும் கத்தோலிக்க போதனைகள்.

2. சேசுநாதரின் திருச்சபை பேரில்

3. ஆயர்களின் அலுவல் குறித்து.

4. குருக்களின் வாழ்வு முறை குறித்து

5. ஞானோபதேசம் குறித்து.

இதில் 2-வது பகுதி மட்டும் நமது ஆராய்ச்சிக்கு உட்பட்டதால் மற்றவைகளை தவிர்த்துவிட்டு திருச்சபைக் குறித்தான ஏட்டினை மட்டும் இங்கு காண்போம்.

திருச்சபைக் குறித்தான ஏடு தயாரிக்கும் போது அது மூன்று பாகங்களாக பிரிக்கப்பட்டது. முதல் 15 அதிகாரங்கள் திருச்சபையின் சாரம் என்னவென்றும், 16-ம் அதிகாரம் பாப்பரசரின் முதன்மைத்துவம் குறித்தும், 17-ம் அதிகாரம் அவருடைய உலகார்ந்த அதிகாரம் குறித்தும் (temporal powers) தயாரிக்கப்பட்டது.

அனைத்தும் தயார் செய்யப்பட்ட நிலையில், திருச்சபையின் 20-ம் பொதுச்சங்கம் 1889-ம் ஆண்டு, டிசம்பர் 8-ம் நாள் முதன்முறையாக வத்திக்கான் பேராலத்தில் நடைபெற்றது. தொடங்கிய சில மாதங்களிலேயே கரிபாலிடியின் படை உரோமாபுரியை கைபற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் தாக்குதலை ஆரம்பித்தது. இச்சூழ்நிலையில் பொதுச்சங்கம் அவசரமாகக் கலைக்கப்பட்டது.

**திருச்சபை குறித்தான ஏடு:**

1870, ஜனவரி 21-ம் நாளன்று திருச்சபை குறித்தான முதல் விவாதக் கோப்பு (schema) சங்க தந்தையர்களிடம் தரப்பட்டது. இது சேசு சபையைச் சேர்ந்த சங். Clement Schrader என்பவரால் தயாரிக்கப்பட்டது. இதில் திருச்சபையை 'ஞான சரீரம்' என்ற கருத்தோடு வரையறுக்கப்பட்டிருந்தது. இதற்கு ஆதரவு அளித்தவர்களின் விவாதம்:

1. ஞான சரீரம் என்ற கருத்து வேதாகமத்தில் பலமுறை காணப்படுகிறது.

2. இது திருச்சபையின் உள்ளரங்க இயற்கைக்கு அப்பாற்பட்ட வாழ்வை தெளிவாக வெளிப்படுத்துகிறது.

3. திரிதெந்தீன் சங்க விளக்கங்களை எதிர்க்கும் புராட்டஸ்டாண்ட் எழுப்பும் குதர்க்க வாதங்களுக்கு நல்லதொரு பதிலாக இருக்கும்(cf Mansi vol. 15, para 553, quoted by Abbé Jean M.Gleize FSSPX)

ஆனால், இத்தகைய ஒரு கொள்கை விளக்கத்திற்கு பெரும்பாலான சங்க தந்தையர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். இது கடுமையான விவாதத்திற்கு வழி

வகுத்தது. அர்ச்.இராபர்ட் பெல்லார்மின் அளித்த இலக்கணத்தை மீறுவதாக இக்கோப்பு அமைந்துள்ளது என்று பலர் கருத்து தெரிவித்தனர். இக்கோப்பு திருச்சபைக்கு தெளிவான விளக்கம் தரவில்லை (Msgr.Grimardias)என்றும், ஒரு உவமையைக் கொண்டு தன்மையை வரையறுக்க முடியாதென்றும் (Msgr. Dupanloup d' orleans), புதியதாய் ஏன் மாற்ற வேண்டும் (Msgr. Lyonnet) என்றும் கருத்து எழுந்தது. இதனைக் குறித்து ஏற்கனவே நாம் குறிப்பிட்டிருக்கிறோம். (cf Salve Regina, Sept-Oct 2011)

எனவே இவ்விவாத கோப்பு 13-ம் அமர்வின் இறுதியில் கைவிடப்பட்டு புதியதாய் ஒன்று தயாரிக்கும்படி புகழ் பெற்ற வேதசாஸ்திரியான Joseph Klentgen -விடம் ஒப்படைக்கப்பட்டது. அவர் திருச்சபை மெய்யான காணக்கூடிய சமுதாயமாய் இருக்கிறது என்ற இலக்கணத்தை அளித்தார். சங்க தந்தையர்கள் அனைவராலும் முழுமனதுடன் ஏற்றுக்கொள்ளப்பட்ட இக்கோட்பாடு விளக்கம் போரின் காரணத்தினால் பிரகடனப்படுத்தபடாமல் போனது.

**ஏட்டின் அமைப்பு:**

முதல் மூன்று இயல்கள் திருச்சபையின் தன்மையை எடுத்துரைக்கின்றன. திருச்சபை மெய்யான ஒரு சமுதாயமாய் (true society) அது சேசுநாதரால் நிறுவப்பட்டு அவருடைய பெயரில் இயங்கிவருகிறது. அடுத்த இரண்டு - திருச்சபை உறுப்பினர்களைக் குறித்தது. திருச்சபை ஆட்சியாளர்களையும் (De ecclesiastica hierarchiea), யார் யார் திருச்சபையின் உறுப்பினர்கள் என்பவற்றை பற்றிய விளக்கம்.

மற்ற ஆறு இயல்களும் திருச்சபையின் செயல்பாடுகளைப் பற்றியது. திருச்சபையும் இரட்சணியமும், (இ.5) திருச்சபையின் போதனையும் (Magisterium - ,.6)> திருச்சபை அதிகாரமும் (இ.7) உரோமாபுரியைத் தலைமை பீடமாய்க் கொண்டுள்ளதைப் பற்றியும் குறிக்கிறது. குறுகிய வார்த்தையின் பல கருத்தைக் கொண்டுள்ள இவ்வேட்டினை ஒரு பெரிய மரத்தையே கொண்டுள்ள ஒரு விதைக்கு ஒப்பிடலாம்.